முஸ்லிம் அல்லாதவர்கள், இஸ்லாம் குறித்த **ஐயங்களை** மனம் விட்டுப்பேச...




அல்லாஹ்வின் திருப்பெயரால்...

# அழைப்பொலி

ஓங்கி ஒலிக்கும் எட்டுத் திக்கும்...

இறைச்செய்தியை இலவசமாகத் தாங்கி வரும் முதல் இஸ்லாமிய மாத இதழ்

மாதந்தோறும் 'அழைப்பொலி' மாத இதழ் உங்கள் மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப்பிற்கு தேடி வர ஒரு குறுஞ்செய்தி அனுப்புங்கள்

மின்னஞ்சல்:
azhaippoli2017@gmail.com

வாட்ஸ்அப்:
98849 28787

அழைப்பு: 1 ஒலி: 4 | துல்ஹஜ் 1438 | செப்டம்பர் 2017 | தனிச்சுற்றுக்கு மட்டும்







**பொருள் ஈட்டுவது! வீடு கட்டுவது! சொகுசாக வாழ்வது! புகழ் தேடுவது!**

**இதற்குப் பிறகு ஏதாவது உண்டா?**

ஆசைக்கு அளவே இல்லை என்பார்கள்.

"நன்றாகப் படிக்க வேண்டும்.

நல்ல நிறுவனத்தில் வேலை பார்க்க வேண்டும்.

பேரழகு வாய்ந்த பெண்ணை மணம் முடிக்க வேண்டும்.

அழகழகாய்ப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

சொகுசான வீடு கட்ட வேண்டும்.

நிம்மதியாக வாழ வேண்டும்."

நீளும் ஆசைகளுக்கு நீலவானமே எல்லை..!

ஆனால்,

எல்லாம் ஒரு நொடியில் – ஒரே ஒரு நொடியில் தூள் தூளாகிவிடுகின்றன.

திடீரென மரணம் வந்து அணைத்துக் கொள்கிறது.

மனிதன் தனது அளவிலா ஆசைகளை அடைய ஏதேனும் வழி உண்டா?

* * *

சரி, ஏதோ ஒரு வகையில் மனிதன் வாழ்க்கையில் செட்டில் ஆகிவிடுகிறான் என வைத்துக்கொள்வோம்.

மனைவி, மக்கள், நண்பர்கள், உறவினர்கள் என்று எல்லாருடனும் சேர்ந்து இன்புறுகிறான்.

இந்த உறவுகளை ஒரு நொடிகூட அவன் பிரிந்திருக்கத் தயாராய் இல்லை.

ஐயகோ, என்னவென்று சொல்வது?

மரணம் வந்து அவனை எல்லா உறவுகளிலிருந்தும் வெட்டிப் பிரித்து இழுத்துச் சென்றுவிடுகிறது.

மீண்டும் அவன் தன் உறவுகளைக் காணவோ அவர்களுடன் மகிழ்ந்து இணைந்து இருக்கவோ ஏதேனும் வாய்ப்பு உண்டா?

* * *

ஓர் அறிவியல் மேதை தன் அரிய கண்டுபிடிப்புகள் மூலம் மனித குலத்துக்கு நன்மை செய்கிறார். பல நூற்றாண்டுகள் தொடரும் அந்த நற்பணிக்கான வெகுமதியைப் பெறுவதற்கு முன்னரே அவரும் மரணத் தொட்டிலில் உறங்கச் சென்றுவிடுகிறார்.

அவருடைய நற்செயலுக்கான முழுமையான நற்கூலியை அவர் பெற்றுக்கொள்ள ஏதேனும் ஒரு வழி உண்டா?

* * *

அதேபோன்று சில தீமைகளின் விளைவுகளும் பல நூற்றாண்டு காலமாயத் தொடர்கின்றன.

பல நூற்றாண்டுகள் அந்தப் பேரழிவு ஆயுதங்களின் பாதிப்புகள் தொடர்கின்றன. இலட்சக்கணக்கான உயிர்கள் அழிக்கப்படுகின்றன.

இவருடைய தீயச் செயலுக்குரிய தண்டனையை அனுபவிக்க ஏதேனும் வழி உண்டா?

* * *

இறைவன் நீதிமிக்கவன்; அவன் யாருக்கும் அநீதி இழைப்பதில்லை என்று சொல்கிறோம். ஆனால் மனிதர்களில் சிலர் ஊனமுற்றவர்களாய் இருக்கின்றனர்; சிலர் அறிவில் குறைபாடு உள்ளவர்களாய் உள்ளனர். அவர்கள் விஷயத்தில் இறைவன் செய்தது அநீதி என்று தோன்றுகிறது அல்லவா?

அவர்கள் ஒரு முழு மனிதனாகுவதற்கு ஏதேனும் வழி உண்டா?

அவர்களின் குறையற்ற வாழ்வுக்கு ஏதேனும் வழி உண்டா?

* * *

வாழ்வது சில நாள். அதற்குள் அனுபவிக்க வேண்டியதை அனுபவித்துக் கொள்வோம் என்று பலர் வாழ்கிறார்கள்.

வாழ்வது சிலநாள். அதை வீணாக்க வேண்டாம். இறையச்சத்தால் பாவச்செயல்களை விட்டு விலகி நல்லமுறையில் வாழ்கிறார்கள். இவர்கள் இருவரும் சமமா?

* * *

படைத்தவன் ஒருவனே. அவனை மட்டுமே வழிபட வேண்டும் எனக் கூறியவர்களும் இறந்துவிடுகிறார்கள்.

பல கடவுள்களை வணங்க வேண்டும் என்று கூறியவர்களும் இறந்துவிடுகிறார்கள்.

கடவுளே இல்லை. மனிதன் தானாகவே உருவாகி விட்டான் என்று கூறியவர்களும் இறந்துவிடுகிறார்கள்.

நானே கடவுள் என்று கூறியவர்களும் இறந்துவிடுகிறார்கள்.

எது சத்தியம்?

எது அசத்தியம்?

இவர்களும் அனைவரும் சமமா?

* * *


வினாக்கள் வட்டமிடுகின்றன.

கேள்விகள் இதயத்தைத் துளைக்கின்றன.

செயல்களுக்குரிய முழுமையான கூலியைப்பெற இந்த உலக வாழ்வு போதாது என்று நம் அறிவு சொல்கிறது.

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

## உள்ளே...


"ஹஜ்" – உண்மை நோக்கம் ஒரு பார்வை 2



இஸ்லாமிய இளைஞர்களே உங்களைத்தான்! 3



இஸ்லாமியக் கொள்கையை அறிந்து கொள்வோம் – 4 6



தியாகம் உணர்த்தும் தியாகத் திருநாள்! 7

# "ஹஜ்" – உண்மை நோக்கம் ஒரு பார்வை

- M. பஷீர் ஃபிர்தவ்ஸி



**இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்று "ஹஜ்". மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள். ஏற்றத் தாழ்வுகள் இல்லை. கறுப்பர் வெள்ளையர் என்ற பேதம் இல்லை. எல்லோரும் ஓர் இறைவனின் அடிமைகள் என்ற படிப்பினைகளைப் புகுத்தி, ஒழுக்க முள்ள சமுதாயத்தைக் கட்டமைத்து, ஒற்றுமையை நிலைநாட்டுகிறது இந்த வழிபாடு. ஆனால், இதன் உண்மை நோக்கம் என்பது வேறு! அந்த உன்னத நோக்கத்தை மறந்து அதனை நிறைவேற்றினால் "ஹஜ்" ஒரு வெற்றுச் சடங்காகவே மாறிப் போகிறது.**

இறைநம்பிக்கையாளர்கள் மீது இறைவன் கடமை யாக்கிய வணக்க வழிபாடுகளில் ஒன்றுதான் ஹஜ் என்ற வழிபாடு. ஹஜ் செய்வதற்கான வாய்ப்பையும் வசதியையும் பெற்றவர்கள் அதனை உடனே நிறைவேற்ற வேண்டும். ஹஜ் செய்ய வசதியுள்ளவர்கள் முதுமைவரை அதனை செய்யாமல் பிற்படுத்துவது கூடாது. நமது சமுதாயத்தில் சிலர், இளமை துடிப்பு மற்றும் பொருளாதார வசதி இருந்தும் ஹஜ் செய்வ தற்கு முதுமை வரவேண்டுமென்று எண்ணி தாமதப் படுத்துகிறார்கள். இன்னும் சிலர், ஆண்டுதோறும் சுற்றுலா சென்று வருவது போன்று ஹஜ்ஜிற்கு சென்று தற்படம்(செல்ஃபி) பிடித்து பரப்புவதில் ஈடுபடு கிறார்கள். இவர்கள் ஹஜ்ஜின் உண்மை நோக்கத்தை புரிந்து கொள்ளாததின் காரணமாக வணக்க வழிபாடுகளை இவ்வாறு பாழ்ப்படுத்துகிறார்கள்.

## ஹஜ்ஜின் நோக்கம்:

இஸ்லாத்தின் முக்கிய வணக்கங்களில் ஒன்றான ஹஜ்ஜின் நோக்கம் அகிலங்களின் அதிபதியாகிய அல்லாஹ்விற்கு நமது முழுமையான கட்டுப்படுதல், பணிவு, அர்ப்பணிப்பு உணர்வு ஆகியவற்றை வெளிப் படுத்துவதற்கும், அதன் மூலம் நாம் அவனது பொருத்தத்தை அடைந்து மறுமையில் பாவ கறைகள் அற்ற நிலையில் அவனைச் சந்தித்து சுவனத்தைப் பெறுவதற்கும் தான் இந்த வணக்கம். ஏனெனில் அல்லாஹ்விடம் ஒப்புகொள்ளப்பட்ட ஹஜ்ஜிற்கு சுவனம்தான் கூலியாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'ஓர் உம்ரா செய்வது மறு உம்ரா வரையிலுள்ள பாவங்களின் பரிகாரமாகும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு, சொர்க்கத்தைத் தவிர வேறு கூலியில்லை.' என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்கள்.

(நூல்: புஹாரி 1773)

நமது ஹஜ்ஜை ஒப்புக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜாக நிறைவேற்றுவதற்கு நாம் அல்லாஹ்வுக்காக மட்டுமே என்ற எண்ணத்தையும் செயல்களையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காகப் பூர்த்தி செய்யுங்கள். (அல்குர்ஆன்2:196)

ஹஜ்ஜை பூர்த்திசெய்வது மூன்று வகைப்படும்:

### 1. ஹஜ்ஜை குறிப்பிட்ட காலத்தில் பூர்த்திசெய்வது.

ஹஜ்ஜை இஸ்லாமிய மார்க்கம் நிர்ணயித்துள்ள குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்ற வேண்டும். அதனை முற்படுத்தவோ பிற்படுத்தவோ கூடாது. ஹஜ்ஜில் நிறைவேற்றப்படுகின்ற அனைத்து செயல்களும் நேரம் குறிப்பிடப்பட்டதாகவே உள்ளன. இவ்வாறு நேரம் நிர்ணயிக்கப்பட்டதற்கும் ஒரு குறிப்பிட்ட நோக்கமும் உள்ளது. எனவே, யார் அல்லாஹ் நிர்ண யித்த காலத்தை குறித்து கவனமற்று இருப்பார்களோ, அவர்கள் அல்லாஹ் நிர்ணயித்த உண்மை நோக்கத்தை புரிந்து கொள்ளாமல் அதனை பாழாக்கியவர்கள் ஆவார்கள்.

"ஹஜ்ஜுக்குரிய காலம் குறிப்பிடப்பட்ட மாதங் களாகும்; எனவே, அவற்றில் எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை தம் மீது கடமையாக்கிக் கொண்டால், ஹஜ்ஜின் காலத்தில் சம்போகம், கெட்ட வார்த்தைகள் பேசுதல், சச்சரவு ஆகியவை செய்தல் கூடாது; நீங்கள் செய்யும் ஒவ்வொரு நன்மையையும் அல்லாஹ் அறிந்தவனாகவே இருக்கிறான்; மேலும் ஹஜ்ஜுக்குத் தேவையான பொருட்களைச் சித்தப் படுத்தி வைத்துக் கொள்ளுங்கள்; நிச்சயமாக இவ்வாறு சித்தப்படுத்தி வைப்பவற்றுள் மிகவும் ஹைரானது (நன்மையானது), தக்வா(என்னும் பயபக்தியே) ஆகும்; எனவே நல்லறிவுடையோரே! எனக்கே பயபக்தியுடன் நடந்து கொள்ளுங்கள்." (அல்குர்ஆன்2:197)

"குறிப்பிடப்பட்ட நாட்களில் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள்" (அல்குர்ஆன் 2:203)

### 2. ஹஜ்ஜை குறிப்பிட்ட இடத்தில் பூர்த்திசெய்வது:

ஹஜ்ஜில் நிறைவேற்றவேண்டிய வழிபாடுகளைச் செய்வதற்கு குறிப்பிட்ட இடங்களை அல்லாஹ்வும் அவனது தூதரும் வரையறுத்துத் தந்துள்ளார்கள். அதனை குறிப்பிட்ட இடங்களில்தான் நிறைவேற்ற வேண்டும். வேறு இடங்களில் அதனை செய்தால் ஒப்புகொள்ளப்படாது. அரஃபாவில் ஒன்றுகூடுவது, மினாவில் தங்குவது, முஸ்தலிஃபாவில் தங்குவது என்று குறிப்பிடப்பட்ட இடங்களில் இபாதத்துகளை நிறைவேற்ற வேண்டும். குறிப்பாக அரஃபாவில் தங்குவது ஹஜ்ஜின் கடமைகளில் மிகமுக்கியமானதாகும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹஜ் என்பதே அரஃபாவாகும்.

(நூல் திர்மிதி 889, சுனனு நஸாயி 3016)

### 3 ஹஜ்ஜை குறிப்பிட்ட முறையில் பூர்த்திசெய்வது:

ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கென்று இஸ்லாம் காட்டித் தந்த வழிமுறையில் அதனை நிறைவேற்ற வேண்டும். அதற்கு ஹஜ் செய்பவர்கள் ஹஜ்ஜின் சட்ட திட்டங்களை முறையாக கற்று அறிந்திருக்கவேண்டும். ஹஜ்ஜின் கடமைகள், சுன்னத்துகள், விரும்பதக்கவை, வெறுக்கதக்கவை, தடுக்கப்பட்டவை ஆகியவற்றை அறிந்துகொண்டு ஹஜ்ஜை நிறைவேற்ற வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: அந்த ஆலயத்திற்குச் சென்றுவர மக்களில் எவர்கள் சக்தி பெற்றவர்களோ அவர்கள் ஹஜ் செய்வதானது அல்லாஹ்வுக்காக ஆற்றவேண்டிய கடமையாகும். ஆனால், யாரேனும் இக்கட்டளையைச் செயல்படுத்த மறுத்தால் (அவர் தெரிந்து கொள்ளட்டும்) உலகத்தார் அனைவரை விட்டும், நிச்சயம் அல்லாஹ் தேவையற்றவனாய் இருக்கின்றான். (அல்குர்ஆன்3:97)

ஹஜ்ஜின் நோக்கத்தையும் அதன் வழிமுறையையும் அறிந்து, அதனை முழுமையாக கடைப்பிடித்து பரிபூர்ணமான ஹஜ்ஜாக நிறைவேற்றிடவும், உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் இந்த அரும்பெரும் பாக்கியம் கிடைத்திட இறைவனிடம் பிரார்த்திப்போமாக!

முதல் பக்கத் தொடர்ச்சி

எது உண்மை? எது சத்தியம்? என்று தெரிந்து கொள்ள இந்த உலக வாழ்வு போதாது என்று நம் மனம் சொல்கிறது.

ஆகவே, மரணம் மனித வாழ்க்கையின் முடிவல்ல.

மரணத்திற்குப் பின் இன்னொரு முடிவற்ற வாழ்க்கை இருக்க வேண்டும்.

மரணத்திற்குப் பின் வாழ்க்கை இல்லை என்றால்:

- நன்மைகளும் தீமைகளும் அர்த்தமற்றவையாகிவிடும்.
- மனிதனுக்கு முழுமையான நீதி கிடைக்கும் வாய்ப்பேயில்லை என்றாகி விடும்.
- மேதைகளின் முடிவுகள்கூட ஈ, எறும்புகளின் முடிவு போல் ஆகி விடும்.
- இறைவன் யார்? அவனைப் பார்க்க முடியுமா? வாழ்வு எதற்கு? மரணம் என்றால் என்ன? மரணத்திற்குப் பின் மனிதனின் நிலை என்ன?
- மறுமை வாழ்க்கை இல்லை என்றால் இதனைப் போன்ற மனிதனை வாட்டி எடுக்கின்ற கேள்விகளோடு அவனும் ஈ, எறும்பு போல் மண்ணோடு மண்ணாகிவிட வேண்டியதுதான்.
- இந்தப் பிரபஞ்சமே அர்த்தமற்ற செயலாகிவிடும்.

இறைவன் எப்படி ஓர் அர்த்தமற்ற செயலைச் செய்வான்?

ஆக, எல்லாச் செயல்களுக்கும் உரிய கூலியை வழங்கக் கூடிய இறுதித் தீர்ப்பு நாள் ஒன்று இருந்தே ஆக வேண்டும். மரணத்திற்குப் பின் இன்னொரு முடிவுற்ற வாழ்க்கை இருந்தே ஆக வேண்டும்.

அர்த்தமுள்ள மறுமை வாழ்வு உண்டு என அழுத்தமாகக் கூறுகிறது குர்ஆன்.

"ஒவ்வொரு மனிதனும் மரணத்தைச் சுவைக்க வேண்டியவனாய் இருக்கிறான். நீங்கள் அனைவரும் உங்களுடைய கூலியை மறுமை நாளன்றுதான் முழுமையாய் பெறுவீர்கள்." (திருக்குர்ஆன் 3:185)

"அன்று மக்கள் பல்வேறு நிலைமைகளில் திரும்புவார்கள். தங்களுடைய செயல்கள் தங்களுக்குக் காண்பிக்கப்படுவதற்காக. பிறகு எவன் அணுவளவு நன்மை செய்திருந்தானோ அவன் அதைக் கண்டுகொள்வான். மேலும் எவன் அணுவளவு தீமை செய்திருந்தானோ அவனும் அதைக் கண்டுகொள்வான்." (திருக்குர்ஆன் 99:6–8)

இதுபோல் மரணம், மரணத்திற்குப் பின் உயிர்த் தெழுதல், மறுமையில் ஒவ்வொருவரும் தனித்தனியாக விசாரிக்கப்படுதல், நல்லவர்களுக்கு நிறைவான நற்கூலியும் தீயவர்களுக்கு முழுமையான தண்டனையும் வழங்கப்படுதல் ஆகியன குறித்த தகவல்களை திருக்குர்ஆன் மிகத் தெளிவாக விவரிக்கின்றது.

என் சமூகத்தினரே! இந்த உலக வாழ்க்கை சில நாட்கள்தாம்! திண்ணமாக, மறுமைதான் நிலையான தங்குமிடமாகும். (திருக்குர்ஆன் 40:39)

ஆகவே, வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள, மரணத்துக்குப் பிறகு என்ன நடக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள, நீங்கள் இறை நூலான திருக்குர்ஆனைப் படியுங்கள்.

– யூசுப்




ONLINE FREE UNANI HERBAL CONSULTATION
044-2848 1344 * Email: drsyedmmameen@gmail.com
for * Sinusitis * Joints Pain * Infertility
* Nervous Debility * Obesity * Beauty & Hair Care
in public interest by Dr. Hakim Syed M.M.Ameen
S.k's Herbal Medical Hospital & Research Centre
36, J.J.K. Road, Royapettah, Chennai - 600 014. India.



# இஸ்லாமிய இளைஞர்களே உங்களைத்தான்!

புதிய தொடர்

இஸ்லாமிய மார்க்கத்தை அருளாகவும் பரிசாகவும் எண்ணி, சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களே உங்களைத்தான் !..

இளைஞர்களே, நீங்கள் யார்? இஸ்லாமிய மார்க்கத்தில் உங்கள் பங்கு என்ன? உங்களால் இஸ்லாத்திற்கு என்ன பயன்? இனி என்ன செய்யப்போவதாக உத்தேசம்? உடலில் பலமும் மனதில் துடிப்பும் கண்களில் கனவுகளையும் நெஞ்சில் நினைவுகளையும் சுமந்து கொண்டு, இந்தப் பருவத்தில் இதயத்துக்குள் ஆயிரம் பட்டாம்பூச்சி பறக்கும், வாலிபத்தை திசை தெரியாமல் சுழற்றிக் கொண்டிருக்கும் நீங்கள் இனி இலட்சியவாதிகளாக மாற வேண்டாமா? இஸ்லாமிய வரலாற்று ஏட்டில் உங்கள் பெயர் பொறிக்க வேண்டாமா? அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெற வேண்டாமா? அவனை உங்கள் கண்களால் காண வேண்டாமா? இஸ்லாமிய வாழ்க்கைக்கு உங்களை தயார்படுத்தி எந்நேரமும் மார்க்கத்தை நிலைத்தோங்க முனைய வேண்டாமா? சொர்க்கச் சோலைகளில் பயணிக்க வேண்டாமா? மறுமையில் நிழல் தரும் அர்ஷில் இடம் பெற வேண்டாமா? பெருமானார் (ஸல்) அவர்களைக் காண வேண்டாமா? நபித்தோழர்களோடு உளம் நனைய வேண்டாமா? என்ன செய்ய வேண்டும் அதற்கு? "வாருங்கள் பயணிப்போம் ஈமானிய ஆவலோடு...

நினைத்ததை முடிக்கும் தருணம் இது. வாழ்க்கையின் வெற்றி தோல்விப் பாதையை முடிவெடுக்கும் வேளை இது. கட்டுப்படுத்தா கனவுகளை கைக்குள் அடக்கி வைத்து செய்யத் துடித்துச் செய்யாமல், ஏன் செய்யவில்லையென்று ஏங்கும் காலம் இது.

இந்த ஆற்றல்களையும் சக்திகளையும் நீங்கள் நன்மைகளுக்கும் பயன்படுத்தலாம் தீமைகளுக்கும் பயன்படுத்தலாம். நன்மைகளுக்குப் பயன்படுத்தினால் உங்களுக்கும் நன்மை, உங்களைப் பெற்றவர்களுக்கும் நன்மை, உங்களைச் சுற்றியிருப்பவர்களுக்கும் நன்மை, குறிப்பாக உங்கள் மறுமைக்கும் நன்மை. நீங்கள் செய்து, காட்டித்தந்த நன்மைகளை, இனி யார் செய்தாலும் அதே நன்மை உங்களுக்கு மீண்டும் மீண்டும் வந்து சேர்ந்து கொண்டே இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக அல்லாஹ் உங்களை நேசிக்கின்றான். "திண்ணமாக நன்மை செய்பவர்களை அல்லாஹ் நேசிக்கின்றான்." மாறாக நீங்கள் தீமையான காரியங்களில் ஈடுபட்டால் அனைத்தும் எதிர்மறையாகிப் போகிறது. அல்லாஹ்வின் வெறுப்பிற்கும் படைப்பினங்களின் வெறுப்பிற்கும் ஆளாகி விடுகிறீர்கள். மேலும் ஷைத்தானிற்கு உற்ற நண்பனாகிப் போகிறீர்கள்.

எனவே, முதல் கட்டமாக இனி நீங்கள் செய்ய வேண்டியது, நான் செய்பவை அனைத்தும் நன்மையான காரியங்கள்தானா என்பதை வாழ்க்கையின் அனைத்து அங்கங்களிலும் உங்களை நீங்களே சுயப்பரிசோதனை செய்து பார்க்கவேண்டும். என்றைக் காவது உங்களை மீறி தீய காரியங்கள் நடந்துவிட்டால் உடனடியாக அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்பைத் தேடிக் கொள்ளுங்கள். இனி இதுபோன்ற இழி செயல்களில் ஈடுபட மாட்டேன் யாஅல்லாஹ்! என்று இறைவனிடம் மன்றாடுங்கள். நிச்சயம் இறைவன் மன்னிக்கக் கூடியவனாகவே இருக்கின்றான்.

உங்களில் பலர் தொழுவதில்லை, நோன்பு நோற்பதில்லை, தீய பழக்கவழக்கங்களில் ஈடுபடுகிறீர்கள், அல்லாஹ்வின் அச்சம் அற்று இருக்கிறீர்கள். ஆனால், இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்திற்கு ஏதேனும் கலங்கத்தை ஏற்படுத்திவிட்டால், முதல் ஆளாய் எதிர்த்து நிற்கிறீர்கள். குரல் கொடுக்கிறீர்கள். அடியும் வாங்குகிறீர்கள்.

உங்களை அறியாமல் இந்த ஈமானிய வேகமும் துடிப்பும் உங்களுக்கு எங்கிருந்து வந்தது? ஆம்! உங்களுக்குள் ஓர் ஈமானிய விதை விதைக்கப்பட்டுள்ளது. இப்போது நீங்கள் செய்யவேண்டியது இவைதான்.

விதைக்கப்பட்ட விதையை நன்கு தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டும். வளர்ந்த பின் பிறருக்கு நிழலாக பயன்தர வேண்டும். மண்ணை வளமாக்க வேண்டும். மழை பொழியச் செய்ய வேண்டும். மானுடர்கள் இளைப்பாறும் இடமாக வேண்டும்.

உடனடியாக உங்களைச் சுற்றியிருக்கும் சூழலைச் சரிபார்க்க வேண்டும். உங்களைச் சுற்றியிருப்பவர்கள் உங்கள் மீது அக்கறை உள்ளவர்களா? உங்கள் மீது அநீதி செலுத்துபவர்களா? உங்கள் நலன் நாடுபவர்களா? உங்களிடம் நடிப்பவர்களா? உங்கள் நண்பர்கள் எவ்வித எதிர்பார்ப்புமின்றி உங்களிடம் நேசம் கொண்டு இன்ப துன்பங்களில் பங்கெடுத்து உங்களிடம் பழகுபவர்களா? இல்லை, வெறுமனே உங்களின் செல்வாக்கிற்கும், செல்வத்திற்கும் ஒட்டி இருப்பவர்களா?

எந்த நிமிடமும் மரணம் நம்மை எதிர்நோக்கி இருக்கின்றது. வாழுகின்ற சொற்ப வாழ்க்கையை வெறுமனே வாழ்ந்து விட்டுச் செல்வது சரியாகுமா? அதுவும் இளமையும் துடிப்பும் நிறைந்து காணப்படும் இந்த ஒப்பற்ற வயதில் இலட்சியமில்லா வாழ்க்கையை வாழ்வது எவ்வகையில் சரியாகும்.

இளைஞர்களோடு பயணிப் போம் அடுத்த இதழில்...

உங்களில் பலர் தொழுவதில்லை, நோன்பு நோற்பதில்லை, தீய பழக்கவழக்கங்களில் ஈடுபடுகிறீர்கள், அல்லாஹ்வின் அச்சம் அற்று இருக்கிறீர்கள். ஆனால், இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்திற்கு ஏதேனும் கலங்கத்தை ஏற்படுத்திவிட்டால், முதல் ஆளாய் எதிர்த்து நிற்கிறீர்கள். குரல் கொடுக்கிறீர்கள். அடியும் வாங்குகிறீர்கள்.

بسم الله الرحمن الرحيم

+91 78712 64444 24/7

ரய்யான் ஹஜ் & உம்ரா சர்வீஸ்

ஹஜ், உம்ரா சேவையில் 20 வருட அனுபவமுள்ள வழிகாட்டிகளை கொண்டுள்ள நிறுவனம்

A UNIT OF BLACK AND WHITE INTERNATIONAL TOURS AND TRAVELS PVT.LTD

Head Office: 31A, பார்க் ரோடு, தக்வா மஸ்ஜித் அருகில், அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம், சென்னை 101.
Tel: +91 44 48575554, Mob: +91 7397733575, Email: info@rayyanhajjumrah.com
Regional Office: A-10, Bldg. 69, Vishal Garh Omkar Society, Mankhurd, Mumbai-400043.

புனித உம்ரா பேக்கேஜ் 14 நாட்கள் (ரமலான் வரை ஒவ்வொரு மாதமும்)

| எக்கனாமி | டீலக்ஸ் | பிளாட்டினம் | லக்சுரி (ஹில்டன் டவர்ஸ்) |
|---|---|---|---|
| ₹56,000 | ₹ 65,000 | ₹80,000 | ₹ 95,000 |

சவுதி விசா, விமான டிக்கெட், ஹரம் ஷெரிஃபிற்கு மிக அருகில் தங்குமிடம், தரமான தமிழக உணவு, தெளிவான வழிகாட்டல், மக்கா மற்றும் மதினாவிலுள்ள வரலாற்று தலங்களை பார்வையிடுதல் கனிவான மற்றும் மனநிறைவான சேவை

FREE 5 லிட்டர் ஜம்ஜம் தண்ணீர், உம்ரா வழிகாட்டி புத்தகம், பேக்

BLACK&WHITE INTERNATIONAL TOURS AND TRAVELS PVT. LTD.

- World Wide Holiday Packages
- Air Tickets
- Tourist Visa (UAE, Qatar, Singapore, etc.,)
- Attestations

BOOKINGS

சென்னை : +91 73977 33574
கீழக்கரை: +91 70923 74444
கள்ளக்குறிச்சி : +91 73977 33576
சவுதி அரேபியா: +966 590618165
பெரம்பலூர் : +91 91763 10742
நாகப்பட்டினம் : +91 91763 10748
நெல்லிகுப்பம் : +91 75388 93758
திட்டச்சேரி : +91 90874 73009
மும்பை : +91 98926 56443
மதுரை: +91 95003 22485
திருவள்ளூர் : +91 78715 74444
துபாய்: +97150 3851929
திண்டுக்கல் : +91 95518 82788
பனைக்குளம் : +91 73973 21470
மல்லிப்பட்டினம் : +91 99765 28022
சங்கராபுரம் : +91 94437 95205

MASTER MIND CONSULTRAINING

For Appointments +91 7397733575

Excelife
Life skills for Excellence
Life Skills Programmes to help you deal with life's challenges

Career Guidance
THE PATHFINDER
What's Next?
After 10th & 12th
Psychometric test to choose your career for a life time of satisfaction and success

Training
Corporate Training
Soft skills
Personality Development
Life Skills
Sales Skills
Leadership
Entrepreneur Development

MBBS Admission
Study MBBS at Yeravan State Medical University (YSMU) in Armenia

Counseling
Marriage Counseling, Parenting, Relationship Counseling, Suicide Intervention

Admission Service
Direct Admissions in Colleges, Universities
IT / CSE / Mech /ECE / EEE / Marine
Auto Mobile / AeroNautical / Bio Tech
Genetics / B.Sc / B.Com M.Sc
M.Com / MCA / MBBS / MS / BDS
MDS / MBA / Hotel Management
Phd / M.Phil

Distance Education
Direct Admission in TNOU, ALIGARH MUSLIM UNIVERSITY for the following Courses.
BA / B.Sc / BBA / B.Com / MA / M.Sc / MBA
M.Com / PGD. in Journalism and Mass Communication

Head Office : 31A, Park Road, Anna Nagar West Extn., Chennai-600 101, Tel.: +91 44 48575554, +91 73977 64963
info@mastermindconsultraining.com www.mastermindconsultraining.com MasterMindConsultraining

Regional Office : A-10, Bldg.69, Vishal Garh Omkar Society, Mankhurd, Mumbai - 400 043

Branch Office : 24, Naduthakka Street, Kallakurichi, Villupuram Dist.

தலையங்கம்

## வரலாறுகளை எப்போது வாசிக்கப் போகிறோம்?

“**தா**ன் சார்ந்த சமுதாயத்தின் வரலாற்றை அறியாதவன் அறியாமையில் மூழ்கியவன்” என அறிஞர்கள் கூறுவர். நாடு, சமூகம், அரசியல், பண்பாடு ஆகியவற்றின் தோற்றம், வளர்ச்சி, கட்டமைப்பு ஆகியன பற்றிய பின்னணி, கருத்தோட்டம் குறித்த தெளிவில்லாமையே சமூகத்தின் பின்னடைவுக்குப் பெரும் காரணம்.

ஒரு விஷயத்தில், நாம் செலுத்துகின்ற ஈடுபாடு அதன் பின்னணி குறித்த அறிதலைக் காட்டுகிறது. அந்த அறிதல் தான் அதன் மீதான பற்றையும் நேசிப்பையும் பெருக்கச் செய்கிறது. அதன் நீட்சியே அது சார்ந்த செயல்களில் நாம் முனைப்பு காட்டி அதற்காக உழைத்து பெரும் பெரும் தியாகங்கள் செய்யும் அளவுக்கு நம்மைத் தள்ளுகிறது.

வரலாறு நெடுகிலும், எல்லா ஆளுமைகளையும் வளர்த்தெடுத்தது இந்த வரலாறுகள் குறித்த வாசிப்புதான். மற்ற துறைகளை ஓரம் ஒதுக்கிவிட்டு, முதலில் இஸ்லாமிய வரலாற்றுத் துறையினை வாசிக்க முனைப்பு காட்ட வேண்டும். ஏற்கனவே வாசித்தவர்கள், மீண்டும் மீள்வாசிப்புச் செய்ய வேண்டும்.

இஸ்லாமிய வரலாறுகளை அறிஞர்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கின்றார்கள். 1.நபிமார்கள் வரலாறு, 2.நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, 3.நபி(ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகிலிருந்து இன்று வரையுமான வரலாறு.. முதல் வகையை நாம் அல்குர்அனில் பார்க்கலாம். இரண்டாம் வகையும் இன்று சுலபமாக கிடைக்கும் வண்ணம் தமிழிலேயே பல புத்தகங்கள் கிடைக்கப் பெறுகின்றன. ஆனால், மூன்றாம் வகையான வரலாறுதான் இன்னும் தமிழில் தெள்ளத் தெளிவான ஆதாரங்கள், விளக்கங்கள், சம்பவங்கள், படிப்பினைகள் கொண்டு எழுதப்படவில்லை. இது முஸ்லிம்களுடைய வாசிப்பின் வீழ்ச்சியாகப் பார்ப்பதா? அல்லது தமிழ் அறிஞர்கள் இந்தத் துறையில் ஆர்வம் செலுத்தாததைச் சுட்டிக் காட்டுவதாகப் பார்ப்பதா? என்ற கேள்விகள் நம்மைச் சுற்றி வட்டமிடுகின்றன.

பன்மைச் சமூக, பண்பாடு, மத, மொழி ஆகியவைகளை தன்னகத்தே கொண்ட நாடான இந்தியாவில், நமது நம்பிக்கையையும், வழிமுறையையும் பின்பற்றுவதற்கும், பரப்புவதற்கும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அளித்திருக்கின்ற உரிமையை இன்னும் செவ்வனே நம்மால் செய்ய முடியாததன் முக்கியக் காரணம், தெளிவான கொள்கை, அதைச் சார்ந்த செயல்பாடுகள், நமது முந்தைய வரலாற்றைக் குறித்த ஆழமான வாசிப்பு ஆகியன இல்லாமையே ஆகும். அவ்வாசிப்பின் அவசியத்தை அறியாமல் இருப்பது, மேலும் நம்மை பின்னடைவிலேயே தள்ளிக் கொண்டிருக்கும்.

ஈமானோடு கலந்துவிட்ட வாசிப்பு சிந்தையைச் செம்மைப்படுத்தும், மனிதனைச் சீர்படுத்தும், தூய எண்ணங்களை மனதில் விதைக்கும். நம்பிக்கையைப் பெருகச் செய்யும், மனஓர்மையைத் தரும், மன அமைதியை வழங்கும், அறிவாயுதம் கூர் தீட்டப்படும். வாசிக்கும் சமுதாயம் வார்த்தெடுக்கப்பட்டால் நாடு வளர்ச்சி அடைந்து, ஒற்றுமை ஓங்கி, சகோதரத்துவம் செழித்தோங்கும்.

ஆக, இனி நாம் செய்யவேண்டியது இதுதான் – நாள் தோறும் ஒரு மணிநேரமாவது வாசிப்பிற்கு நேரம் ஒதுக்க வேண்டும். வரலாற்றுத் துறைக்கு அதில் சில நிமிடங்களைத் தர வேண்டும். வரலாற்றைக் குறித்த தெளிந்த தமிழ் புத்தகங்கள் கல்வியாளர்களால் விரைவிலேயே எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு வரலாற்று அறிவாளரை உருவாக்க வேண்டும். வாசிப்பை நேசிக்கும் சமுதாயம் வீறு கொண்டு வளர வேண்டும்.

கௌரவ ஆலோசகர்கள் & இதழ் மேற்பார்வை
M. பஷீர் ஃபிர்தவ்ஸி | முஹம்மது இஸ்மாயீல் காஷிஃபி
அபூமொஹ்சின் | நண்பன் அபூபக்கர்
இதழ் வடிவமைப்பு: “1st Step” இம்ரான்
ஆசிரியர்: மக்தூம் தாஜ்
உங்கள் படைப்புகள் மற்றும் கருத்துகளை அனுப்ப
“அழைப்பொலி” மாத இதழ்
எண்.14 (7-A), பி.பி.டி.ரோடு, தாங்கல், சென்னை – 19.
அலைப்பேசி – வாட்ஸ்அப் : 98849 28787
மின்னஞ்சல்: azhaippoli2017@gmail.com

வேதவரிகள்

## மனிதன் தனக்கே அநீதி இழைப்பவன்

**நாம் இந்த அமானிதத்தை வானங்கள், பூமி மற்றும் மலைகள் ஆகியவற்றின் முன்பாக வைத்த போது அவை அதனை ஏற்கத் தயாராகவில்லை. மேலும், அதனைக் கண்டு அஞ்சின. ஆனால், மனிதன் அதனை ஏற்றுக் கொண்டான். திண்ணமாக, அவன் பெரிதும் அநீதி இழைப்பவனாகவும் அறியாதவனாகவும் இருக்கின்றான்.**

*(அல்குர்ஆன்33:72)*

மாபெரும் பொறுப்பை தானாக முன்வந்து சுமந்து கொண்ட மனிதன் அதைப்பற்றிய எந்த கவலையுமில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். ஒரே இறைவனை வணங்ககுதல், நன்மை தீமைகளை உணர்ந்து செயல்படுதல், சத்தியத்தையும் அசத்தியத்தையும் இனம் கண்டு வாழ்தல், நீதியை அநீதியை அறிந்து நடத்தல் போன்றவைகளின் பொறுப்புகளைத்தான் இறைவன் அமானிதம் என்று குறிப்பிடுகின்றான். இந்த பெரிய பொறுப்புகளையெல்லாம் சுமப்பதற்கு, சோதனைகளை ஏற்றுக் கொள்வதற்கு யார் தயார் என்று வானங்கள், பூமி, மலைகள் ஆகிய ஒவ்வொன்றிடத்திலும் கேட்கப் பட்டது. இந்த மிகப்பெரியச் சுமையை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது அனைத்தும் மறுத்து விட்டன.

இந்த சுமைகளின் பின்னால் உள்ள மாபெரும் பொறுப்புகளை உணராமல் சோதனைக்குத் தயாரான மனிதன், படைத்தவனிடம் அளித்த வாக்குறுதிகளை மறந்து உதாசீனப்படுத்தி மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஈடில்லா அறிவைப் பெற்ற மனிதன், எண்ணற்ற கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து வானளாவ உயர்ந்து வாழ்கின்றான். என்றாலும் அவன் படைக்கப்பட்டதன் நோக்கம் என்னவென்று கண்டுபிடிக்காமல், அதைப் பற்றிய சிந்தனையில்லாமல் தான்தோன்றித் தனமாக வாழ்ந்து தனக்குத் தானே அநீதி இழைத்துக் கொள்ளக் கூடியவனாக இருக்கிறான்.

மரணத்திற்குப் பிறகு தனக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியைக் குறித்து இறைவனால் வினவப்படும் பொழுது, பதில் சொல்ல முடியாமல் திக்குமுக்காடி நஷ்டவாளியாகவும் மாறிப் போகிறான்.

தூதர் மொழிகள்

## அனாதைகளை ஆதரிப்பீர்!

*ஸஹ்ல் இப்னு ஸஅது(ரலி) அறிவிக்கின்றார்கள்:*

*“நானும் அனாதையின் பொறுப்பாளரும் சொர்க்கத்தில் இவ்வாறு இருப்போம்” என்று கூறியபடி நபி(ஸல்) அவர்கள் தன் ஆட்ககாட்டி விரலாலும், சுட்டு விரலாலும் சைக்கினை செய்தார்கள்.*

*(நூல்கள்: புகாரி 6005, திர்மிதீ 1841, அபூதாவூத் 4483, அஹ்மத் 21784)*

ஆதரவற்ற அனாதைக் குழந்தைகளை தத்து எடுத்து வளர்க்கும் பொறுப்பு, சமூகத்திற்கே உண்டு. ஆனால் நம் குழந்தைகளையே வளர்க்க வழியில்லை. இதில் அனாதைகளையும் வளர்ப்பதா? இயலாது என்று ஒதுங்கி விடுவோர் உண்டு. விபத்துகளிலும், கலவரங்களிலும், இயற்கை சீற்றங்களிலும் பெற்றோரைஇழந்துவிட்ட குறையைத் தவிர, வேறு என்ன தவறை அக்குழந்தைள் செய்துவிட்டனர்.

இதுமாதிரியாக குழந்தைகளை எடுத்து வளர்ப்பவர், மறுமையில் எனது நட்பை பெறலாம் என்பதே நபி(ஸல்) அவர்களின் அறைகூவல். அவர்களின் நட்பு கிடைக்கும் வாய்ப்பை எந்த மனிதரேனும் இழப்பாரா? அனாதைகளை ஆதரிக்கும் நற்பண்பை நபி(ஸல்) அவர்கள் இங்கே போதிக்கின்றார்கள்.

## வாசகர் கருத்து!



**ஆ**கஸ்ட் மாத இதழ் கட்டுரைகள் அனைத்தும் அருமையாக இருந்தது. குறிப்பாக, “இளைஞர்களே மனம் திருந்துங்கள்”, “இஸ்லாமும் மருத்துவமும்” ஆகிய இரண்டு கட்டுரைகளும் சமூகத்துக்கு பயனுள்ள தகவல்களாக இருந்தன. மேலும், அழைப்பொலிக்கு என்னுடைய ஆலோசனை என்னவென்றால், கட்டுரையில் வரும் வாக்கியங்கள் முடியுமானவரை பிரிந்து விடாமல் இருந்தால் வாசிப்பதற்கு எளிமையாக இருக்கும். இதுபோன்ற நற்செயல்களை மென்மேலும் சமுதாயத்தில் கொண்டு செல்ல அல்லாஹ் உதவி புரிவானானாக!...

**– அசாருதீன் பின் சையத், திருவொற்றியூர்.**

“**ம**ணமகன் தேவை” என்கிற கவிதை ஆக்கம் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. இக்காலச் சூழ்நிலையில் இதுதுபோன்ற எதிர்பார்ப்புகளுடனும் பெண்கள் இருக்கிறார்களா? என்று எண்ணி வியந்தேன். இறைவன் அவர்களின் எதிர்பார்ப்பிற்கேற்ற மணமகனை தந்தருள்வானாக. இதுபோன்ற படைப்புகளை கண்டு, அவற்றை மக்களுக்கு அடையாளப்படுத்தும் அழைப்பொலிக்கு நன்றி...

**– அப்துல்லாஹ், சென்னை**

**உ**ங்கள் இதழையும் அதன் அறிமுகத்தையும் இஸ்லாம்கல்வி.காம் இணையதளத்தில் பார்வையிட்டேன். இந்த இறைப்பணியில் நானும் பங்கெடுக்க ஆசைப்படுகிறேன். எங்கள் ஊருக்கு அழைப்பொலியை அனுப்பி வையுங்கள். எங்கள் ஊர் மக்களுக்கும் இறைச் செய்தி சென்றடையட்டும்.

**– அப்துல் அஜீஸ், களூர்**

“**இ**ளைஞர்களே மனம் திருந்துங்கள்” என்ற கட்டுரை மிகவும் அருமை. அதனை படித்து கண்கலங்கிப் போனேன். இளைஞர்கள் விரைவில் திருந்த வேண்டும். “அழைப்பொலி”யின் எழுத்து பாணி நன்றாக உள்ளது. மிகவும் சாதாரண நடையுமில்லாமல், உயர்ந்த நடையுமில்லாமல் நடுநிலைத் தரத்துடன் அமைந்துள்ளது. இதனையே கடைப்பிடியுங்கள். மொத்தத்தில் அழைப்பொலி நல்ல வாசிப்புப் பயிற்சி.

**– சிராஜுத்தீன், தாங்கல்**



இணையதளம் இன்று உலகத்தை உள்ளங்கைக்குள் அடக்கி, உள்ளத்தையும் சிந்தனையையும் ஆண்டு கொண்டிருக்கிறது. இணையத்தால் அழிந்து போனவர்களும் உண்டு. அறிவை வளர்த்துக் கொள்பவர்களும் உண்டு. நேரத்தின் அருமையை அறிந்தவர்கள், நேர்த்தியாக இணையத்தை பயன்படுத்திக்கொள்வார்கள். நோக்கமில்லா நெட்டிசன்கள் அதிலே மூழ்கி, பரிதவிப்பதை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். சரி! இஸ்லாமியச் சமூகத்தின் இணையச் சூழல்கள் எப்படி இருக்கிறது என்று கொஞ்சம் ஆய்வு செய்தால், படுமோசமான நிலைமையை மிஞ்சும் அவல நிலைதான் நிலவுகிறது. சிறார்கள் முதல் பெரியவர்கள் வரை தங்களை மறந்து, தங்கள் அலுவல்களை மறந்து, ஏன்! ஒரு சில நேரங்களில் தொழுகையையே மறந்து முகநூல், கட்செவி அஞ்சல்(வாட்ஸ்அப்) போன்ற சமூக வலைத்தளங்களில் வீழ்ந்து கிடப்பதை காண முடிகிறது. அந்தந்த காலத்துக்கும் சூழலுக்கும் ஏற்ற அறிஞர்கள், அழைப்பாளர்கள், வழிகாட்டிகள், சீர்திருத்தர்கள் அவ்வப்போது எல்லா தளங்களிலும் தோன்றிக் கொண்டுதான் இருப்பார்கள். அதன் சாரம்சமாகவே, இன்று சமூக வலைத்தளங்களிலும் சீர்திருத்தவாதிகள் தங்கள் அறிவுரைகளை எழுத்தால், பேச்சால் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு சமூக வலைத்தளங்களில் சீர்மிகு செயல்பாட்டாளர்களின் பதிவுகளை அடையாளப்படுத்துகிறது "அழைப்பொலி". கடந்த மாதத்தில் அதிகம் வரவேற்கப்பட்ட, பகிரப்பட்ட இரண்டு கல்வியாளர்களின் பதிவுகளை இம்மாத இதழில் காணலாம்...



# நாங்களும் முஸ்லிம்கள்தான்!

எங்களுக்கு நேரம் இருக்கிறது – ஆனால்
நேரத்தோடு பள்ளிவாசலுக்கு வரமாட்டோம்.

வைகறைத் தொழுகைக்கு வர இயலவில்லை – ஆனால்
விடியாமலே விரைந்து செல்வோம் விளையாட்டு மைதானத்துக்கு.

ஊர் முழுக்க வலம் வர உடம்பில் தெம்புண்டு – ஆனால்
ஒரு வக்து தொழுகைக்கும் இறையில்லம் வர மாட்டோம்.

மருந்து சாப்பிடுவதால் தொழ முடியவில்லை – ஆனால்
விருந்து சாப்பிடுவதற்கு ஒன்றும் தடையில்லை.

பள்ளிக்கு பக்கத்தில் பாங்கு சத்தம் கேட்போம் – ஆனால்
சத்தமே இல்லாமல் நடையைக் கட்டிவிடுவோம்.

வீதியில் சும்மாதான் இருப்போம் – ஆனால்
ஜும்ஆவுக்கு கடைக்கோடியில்தான் நிற்போம்.

ஒரு நாள் முழுக்க எங்களுக்கு ஓய்வுதான் – ஆனால்
உறங்குவது என்னவோ ஜும்ஆவில்தான்.

விருந்தில் முதல் பந்திதான் பிடித்த இடம் – ஆனால்
ஜும்ஆவில் கடைசி இடம்தான் எங்கள் புகலிடம்.

அளவின்றி அரட்டை அடிப்போம் – ஆனால்
மருந்துக்குக் கூட மார்க்க அறிவுரைகள் கேட்கமாட்டோம்.

ஒளு கூட எங்களுக்கு சரியாகத் தெரியாது – ஆனால்
உபதேசம் எங்களுக்கு அறவே பிடிக்காது.

பத்திரிகையை வரிக்கு வரி மேய்வோம் – ஆனால்
உலகப் பொது மறையில் ஒரு வரி கூடத் தெரியாது.

உலகப் பொதுமறை என்று முழங்குவோம் – ஆனால்
அதில் ஒரு கட்டளையைக் கூட மதிக்க மாட்டோம்.

பர்தா பேணாதவர் பாவி என்போம் – ஆனால்
பர்தா அணிந்தே பல பாவங்கள் புரிவோம்.

உடம்பு முழுக்க வியாதி இருக்கும் – ஆனால்
உணவில் கட்டுப்பாடு ஒரு துளியும் பேண மாட்டோம்.

தட்சணை ஆகாது என்று வீரம் பேசுவோம் – ஆனால்
கொல்லைப்புற வழியாக கொத்தாகப் பிடுங்குவோம்.

மஸ்ஜிதில்தான் திருமணத்தை நடத்துவோம் – ஆனால்
மறைமுகமாக மார்க்கம் மீறுவோம்.

ஒரு பருக்கை சோறு கூட பரகத் என்போம் – ஆனால்
திருமணத்தின்போது அண்டா சோற்றையே வீதியில் கொட்டுவோம்.

நீண்ட தேடலில் துணையை வசப்படுத்துவோம் – ஆனால்
நிமிடத்தில் ஜமாஅத்துக்கு வருவோம் விவாகரத்து மனுவோடு.

வீட்டின் சுற்றுப்புறம் வரை சுத்தம் பேணுவோம் – ஆனால்
வீட்டுக் குப்பைகளை வீதியில் இறைத்து அசுத்தம் செய்வோம்

தாய் தந்தை நலம் பேண வேண்டும் என்போம் – ஆனால்
தாரம் வந்ததும் தாயகம் துறப்போம்.

என் பெற்றோர் மேல் எனக்கு உயிர் என்போம் – ஆனால்
அவர்தம் உயிர் பிரிந்த பின்னர்தான் ஊருக்கே வருவோம்.

குழந்தையின் உயர்வில் ஆர்வம் கொள்வோம் – ஆனால்
குர்ஆன் ஓத அனுப்பக் கூட நேரமில்லை என்போம்.

ஒருதாய் பிள்ளை என உரக்கச் சொல்வோம் – ஆனால்
உள்ளவன் இல்லாதவன், உள்ளூர் வெளியூர் என பிரித்து மேய்வோம்.

அடுத்தவன் காசு எனக்கெதற்கு என்போம் – ஆனால்
வடிகாலைக் கூட விட்டு வைக்காமல் வளைத்துப் போடுவோம்

இடஒதுக்கீடு கேட்டு கோரிக்கை வைப்போம் – ஆனால்
படித்து பட்டம் வாங்கியதும் வெளிநாடு பறப்போம்.

மழை இல்லை என கவலை கொள்வோம் – ஆனால்
குளிக்கும் நீரின் அளவில் ஒளு செய்வோம்.

ஏழைகள் மீது பரிவு காட்டு என்போம் – ஆனால்
வட்டிக்கு பணம் விட்டு இரத்தம் உறிஞ்சுவோம்.

பகிர்ந்து உண்ண வேண்டும் என்று பேசுவோம் – ஆனால்
ஜகாத் பொருளை பதுக்கி வைப்போம்.

ஒற்றுமை கோஷங்கள் எழுப்புவோம் – ஆனால்
தேர்தலில் எங்களை நாங்களே தோற்கடிப்போம்

இவையெல்லாம் துணிச்சலாகச் செய்வோம் – ஆனால்
தயங்காமல் சொல்வோம் நாங்களும் முஸ்லிம்கள்தான் என்று!!!

வேதனையுடன்...

S. செய்யித் அலி ஃபைசி
(முதல்வர், ஃபிர்தவ்ஸிய்யா அரபிக் கல்லூரி)

# நல்லவராக இருத்தல் வேறு! சீர்திருத்தப் பணி வேறு!!



நல்லவராக இருப்பதற்கும் சீர்திருத்தப் பணிகளில் ஈடுபடுவதற்கும் இடையே பாரிய வேறுபாடு உள்ளது.

நல்லவராக இருத்தல் என்பது நல்ல காரியம்தான். ஆனால் அதில் ஒருவகை பகட்டும் பலவீனமும் உள்ளடங்கி இருக்கும். ஆம். "நான் நல்லவன்.." என்று காட்டுவதற்காக சமூகத்தைவிட்டு ஒதுங்கி இருத்தல் ஒருவகை பகட்டுதான்.

சீர்திருத்தம் என்றுசொல்லி எதிலாவது ஈடுபட்டால் மக்களின் ஏச்சுக்களையும் பேச்சுக்களையும் எதிர்கொள்ள வேண்டி வருமே நமக்கெதற்கு வம்பு என்று ஒதுங்கி இருப்பது ஒருவகையில் பலவீனமே.

பொதுவாக மக்கள், நல்லவர்களையே விரும்புவார்கள். சீர்திருத்தவாதிகளை வெறுப்பார்கள். ஏனெனில் மனம்போன போக்கில் வாழ்பவர்களை சீர்திருத்தம் செய்து நல்வழிப்படுத்துபவர்களை அவ்வளவு சீக்கிரம் யாரும் ஏற்றுக்கொள்வதில்லை. மனித மனோபாவம் இது.

ஆகவேதான் இறைத்தூதராக அனுப்பப்படுவதற்கு முன்னர் முஹம்மத் என்ற தனிநபரை குறைஷிகள் நேசித்தனர்.. விரும்பினர்.. பட்டப் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். ஏனெனில் முஹம்மத் (ஸல்) என்ற தனிநபர் மிகவும் நல்லவராக இருந்தார்.

அதேவேளை இறைத்தூதராக அனுப்பப்பட்ட பின்னர் பொய்யர், மந்திரவாதி, பைத்தியக்காரர் என்று தூற்றினர்.. வெறுத்தனர். காரணம் முஹம்மத் (ஸல்) இப்போது சீர்திருத்தவாதியாக மாறிவிட்டார்கள்.

முஹம்மத் என்ற தனிநபர் பிறந்த செய்தியைக் கேள்விப்பட்டு மகிழ்ச்சியில் ஓர் அடிமையை விடுதலை செய்தான் அபூலஹப். அதேவேளை அதே முஹம்மத் (ஸல்) அவர்கள் சீர்திருத்தவாதியாக மாறியபோது அவருடைய முகத்தில் மண்ணை அள்ளி வீசினான் அபூலஹப்.

"ஆயிரம் நல்லவர்களைவிட ஒரு சீர்திருத்தவாதியையே அல்லாஹ் விரும்புகிறான்" என்று அரபியில் முதுமொழி ஒன்று உள்ளது. ஏனெனில் ஒரு சீர்திருத்தவாதி மூலம் ஒரு சமூகத்தையே அல்லாஹ் பாதுகாக்கின்றான். அதேநேரம் ஒரு நல்லவர் தன்னை மட்டுமே பாதுகாக்கின்றார்.

ஆகவேதான் அல்லாஹ் கூறுகின்றான்: "மேலும் உம் இறைவன் எந்த ஊரையும் அவ்வூர் மக்கள் சீர்திருத்தம் புரிவோராய் இருக்கும் நிலையில் நியாயமின்றி அழித்துவிடுவதில்லை" (11:117)

இந்த இறைவசனத்தை சற்று கவனியுங்கள். நல்லவர்களாக இருந்தால் என்று கூறவில்லை. மாறாக சீர்திருத்தம் செய்பவர்களாக இருந்தால் என்றுதான் கூறுகின்றான்.

நல்லவராக இருந்தது போதும். சீர்திருத்தம் செய்பவராக மாறுங்கள்!

– நூஹ் மஹ்ழரி
(பேராசிரியர்,
அஸ்ஸலாம் இஸ்லாமியக் கல்லூரி)

# இஸ்லாமியக் கொள்கையை அறிந்து கொள்வோம் - 4



சென்ற இதழ் தொடர்ச்சி...

**இறைவனுடன் இணைவைத்தலும் அதன் வகைகளும்!...**

நீங்கள் அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனுடன் எதனையும் இணையாக்காதீர்கள். *(4.36)*

நிச்சயமாக இணைவைப்பது மாபெரும் அக்கிரமமாகும். *(31.13)*

எவன் அல்லாஹ்வுடன் இணை வைக்கின்றானோ அவனுக்கு நிச்சயமாக அல்லாஹ் சுவனத்தை தடை செய்துள்ளான். மேலும் அவனது இருப்பிடம் நரகமாகும். *(5.72)*

**இணைவைத்தலின் ஊற்றுக்கண்கள் நான்கு**

1. காரணங்களை காரணகர்த்தாவாக நம்புவது. உதாரணமாக: வாழ்வாதாரங்களை பெறுவதற்கு துணை நிற்கும் இயந்திரங்கள், தொழிலகங்கள், வியாபாரத் தலங்கள், வாகனங்கள், தோட்டங்கள், விளைநிலங்கள், ஆகியவை காரணங்களாகும். இவற்றைக் காரண கர்த்தாவாகக் கருதுவதும், வழிபடுவதும் இணை வைத்தலாகும்.
2. இறைவன் அல்லாத சக்திகள் மீது வரம்பு மீறிய பற்றும், பாசமும் மதிப்பும் மரியாதையும் வைப்பதன் மூலமாக, அவர்கள் இறைவனுக்குரிய தனித்தன்மைகள் உள்ளவர்கள் என வர்ணிப்பது, சிரவணக்கம் செய்வது, (உ.ம்) ஆன்ம குருமார்கள் தம் சீடர்களின் மன வேட்கைகளை, எண்ணங்களை அறியக்கூடியவர்கள்; சீடர்கள் எங்கிருந்து அழைத்தாலும் கேட்கக்கூடியவர்கள்; உதவக் கூடியவர்கள்;

   சீடர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் எனக் கண்காணிப்பவர்கள் என்று கருதுவதும் அன்னையை, பிதாவை, குருவை, அரசியல் மாமேதைகளை மரியாதை நிமித்தம் சிரவணக்கம் செய்வதும் இறைவனுடன் இணைவைப்பதாகும்.
3. இறைத்தூதர்கள், இறைநேசர்கள் ஆகியோரின் அற்புதங்களைக் கண்டு, அவற்றை அவர்களுடைய சாதனைகளாக வர்ணித்து, அவர்களும் இறை சக்தியில் பங்கு உள்ளவர்கள் எனக் கருதுவதும் இணை வைத்தலின் ஊற்றுக்கண்ணாகும்.

இணைவைத்தல் இவ்வாறு வகைப்படுத்தலாம்.

1. இறைவனின் ஆளுமையில் இணை வைப்பது.
2. இறைவனின் தன்மைகளில் இணை வைப்பதுது.
3. இறைவனின் உரிமைகளில் இணை வைப்பது.

**1. ஆளுமையில் இணைவைத்தல்:**

* ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள்கள் இருப்பதாக நம்புவது.
* இறைவனுக்குப் பெற்றோர் மனைவி, மக்கள் இருப்பதாக நம்புவது.
* மனிதர்கள் அல்லது மிருகங்களின் உருவத்திலோ ஏனைய படைப்பினங்களின் வடிவத்திலோ இறைவன் இவ்வுலகில் தோன்றுவதாக (அவதாரம் எடுப்பதாக) நம்புவது.

  இவையனைத்தும் இறைவனின் ஆளுமையில் இணைவைத்தலாகும்.

**2. தன்மைகளில் இணை வைத்தல்:**

* இறைவனுக்கு எவ்விதம் யாருடைய துணையுமின்றி அனைத்தையும் அறிகின்ற, பார்க்கின்ற, கேட்கின்ற ஆற்றல் உண்டோ அத்தகைய ஆற்றல் (தன்மை) மற்றவருக்கும் உண்டு என நம்புவது.
* இறைவனுக்கு எவ்விதம் லாபம் நஷ்டம் ஏற்படுத்தும் ஆற்றல் உண்டோ அத்தகைய ஆற்றல் மற்றவருக்கும் உண்டு என நம்புவது.
* இறைவனைப் போன்ற வல்லமையும், பேராற்றலும் மற்றவருக்கும் உண்டு என நம்புவது.
* இறைவன் எவ்விதம் ஆதிஅந்தம் இல்லாதவனாகவும் நித்திய ஜீவனாகவும் இருக்கிறானோ அவ்வித ஆற்றல் உள்ளவர்கள் ஒரு சிலரோ, பலரோ இருப்பதாக நம்புவது.

  இவையனைத்தும் இறைவனின் தன்மைகளில் இணைவைத்தலாகும்.

**3. உரிமைகளில் இணை வைப்பது:**

* இறைவனையன்றி மற்றொன்றை வணங்குதல். சிரவணக்கம் செய்தல் (வணங்கும் எண்ணத்துடன் தலையை சாய்த்தல்)
* இறைவனைத் தவிர மற்றவர்களின் நெருக்கமும் நல்லாசியும் பெறுவதற்காகப் பிராணிகளை பலியிடுதல்.
* இறைவனுக்கன்றி மற்றவருக்குக் காணிக்கை நேர்ச்சை செய்தல்.
* இறைவனையன்றி மற்றவர்களுக்கும் கஷ்ட நஷ்டங்களையும், துன்ப துயரங்களையும் நிவர்த்தி செய்யும் ஆற்றல் உண்டு என நம்பி அவர்களிடம் பிரார்த்தனை செய்தல் அல்லது ஆராதனை செய்தல்.
* இறைவனைத் தவிர மற்றவருக்கும் ஹலால் ஹராம் என்று அனுமதிப்பதற்கான, தடைவிப்பதற்கான அதிகாரம் உண்டு; மேலும் சட்டம் இயற்றும் அதிகாரம் உண்டு என நம்புவது.

  ஆகிய இவையனைத்தும் இறைவனின் உரிமைகளில் இணைவைத்தலாகும். மேற்கண்ட இணைவைத்தலின் வகைகளில் நம்மை அறியாமல் இருந்து வந்தோமேயானால், உடனடியாக நம்மை மாற்றிக் கொண்டு, இறைவனிடம் பாவமன்னிப்புக் கேட்டு மீள்வது அவசியமாகும். ஏனெனில்

“இந்த அநீதி மன்னிக்கப்படாத குற்றமாகும். நிச்சயமாக தனக்கு இணைவைப்பதை அல்லாஹ் மன்னிப்பதில்லை. இதைத் தவிர தான் நாடுவோரின் அனைத்துப் பாவங்களையும் மன்னிக்கின்றான்.” *(அல்குர்ஆன்4.48)*

**– அப்துல் ஹஃபீஸ் ரஹ்மானி**

அடுத்த இதழில்... “வானவர்களை நம்புவது”

## “அழைப்பொலி” ஓங்கி ஒலிக்கட்டும் எட்டுத்திக்கும்!

உங்கள் “அழைப்பொலி” மாத இதழை, தடைகள் பல கடந்து நான்கு இதழ்கள் வெற்றிகரமாகக் கொண்டுவந்திருக்கிறோம். “அல்ஹம்து லில்லாஹ்” வடசென்னையை மட்டும் முன்னிறுத்தி தொடங்கப்பட்ட இதழ், இன்று புரசைவாக்கம், பூந்தமல்லி, வேளச்சேரி, தாம்பரம், செங்குன்றம் என சென்னையின் பிரதான இடங்களிலும், கிருஷ்ணகிரி, செஞ்சி, திருவண்ணாமலை, கரூர் என தமிழக அளவிலும் வளர்ந்து நிற்கிறது. இறைவனின் மாபெரும் கிருபையால், திருவொற்றியூர், தாங்கல் பகுதியில் அலுவலகமும் திறக்கப்பட்டுள்ளது. இந்த இறைச்செய்தியின் ஒலியை, இன்னும் ஓங்கி ஒலிக்கச் செய்ய, விநியோகத்தை மேலும் விசாலப்படுத்த திட்டங்களும், முயற்சிகளும் எடுத்து வருகிறோம். ஆலோசனைகள் வழங்கி, மேற்பார்வையிடும் ஆசிரியர் குழுவுக்கும், இஸ்லாம்கல்வி.காம் இணையதளத்திற்கும், உடன் இருந்து உதவும் நண்பர்களுக்கும், முகம் சுழிக்காமல் மாதந்தோறும் விநியோகித்து, அடுத்தமாதம் எப்போது? என ஆவலுடன் கேட்கும் சகோதரர்களுக்கும், விளம்பரம் கொடுத்துதவும் வணிகர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக அன்பு வாசகர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

“அழைப்பொலி”யின் பணி இதழியலில் மட்டுமில்லாது, வரும்காலங்களில், பதிப்பகம், அழைப்பியல், ஊடகம், கல்வி பயிலகங்கள், வட்டியில்லா கடன், குடும்ப ஆலோசனை மையம் போன்ற இன்னும் பரந்து விரியும் பல நற்பணிகள் செய்ய உங்கள் பிரார்த்தனையையும், ஆதரவையும் எதிர்ப்பார்க்கிறோம்.

அழைப்பொலியின் சேவை நிலைகுலையாமல் என்றும் தொடர்ந்து, அதன் வளர்ச்சியில் பங்கெடுத்து உதவி செய்ய விரும்புபவர்கள் எங்களை அணுகவும்.

– ஆசிரியர்.


*மேலும் விவரங்களுக்கு:*

**“அழைப்பொலி” மாத இதழ்**

எண்.14 (7-A), பி.பி.டி.ரோடு, தாங்கல்,
சென்னை – 600 019.
அலைபேசி – வாட்ஸ்அப் : 98849 28787
மின்னஞ்சல்: azhaippoli2017@gmail.com




அழைப்பொலி
ஓங்கி ஒலிக்கும் எட்டுத் திக்கும்...



# தியாகம் உணர்த்தும் தியாகத் திருநாள்!

– மௌலவி வி.எஸ். முஹம்மத் முஸம்மில் புகாரி

> **இத்தியாகத் திருநாள் இம்மாதத்தில் கொண்டாடப்பட்டாலும், இந்நாள் கொண்டாடி முடிந்துவிட்டாலும் அதன் கண்ணியமும், மகத்துவமும் இம்மாதம்(துல்ஹஜ்) முழுதும் போற்றப்படவும், நினைவுபடுத்தப்படவும் வேண்டும். இந்த உயரிய நினைவுகள், பெருநாளை முடித்திருக்கும் முஸ்லிம்களுக்கும், இத்திருநாளின் தியாகத்தைப் புரிந்து கொள்ள முஸ்லிம் அல்லாதார்க்கும்...**

தியாகத் திருநாள் என்றழைக்கப்படும் ஹஜ் ஜுப் பெருநாள். உலக இஸ்லாமியர்களால் அரபிய மாதமான துல்ஹஜ் பிறை பத்தாம் நாள் கொண்டாடப்படுகிறது. திருநாள்கள் என்றாலே ஆட்டம், கோலாகலம், கொண்டாட்டம் என்பதல்ல மாறாக அனைவரும் உண்டு உடுத்தி ஒரு சேர மகிழ்வாய் கழிப்பது, சொந்த பந்தங்களுடன் உறவாடுதல், ஏழை எளியோருக்கு கொடுத்துதவி அதன் மூலம் உவகை அடைவது,இறைவனை புகழ்ந்து துதிப்பது போன்ற நல்ல அம்சங்கள் தான் திருநாளுக்கான அடையாளங்கள் என இப்பெரு நாட்கள் சொல்லித் தருகின்றன. இத்தியாகத் திருநாள் இம்மாதத்தில் கொண்டாடப்பட்டாலும், இந்நாள் கொண்டாடி முடிந்துவிட்டாலும் அதன் கண்ணியமும், மகத்துவமும் இம்மாதம்(துல்ஹஜ்) முழுதும் போற்றப்படவும், நினைவுபடுத்தப்படவும் வேண்டும். இந்த உயரிய நினைவுகள், பெருநாளை முடித்திருக்கும் முஸ்லிம்களுக்கும், இத்திருநாளின் தியாகத்தைப் புரிந்து கொள்ள முஸ்லிம் அல்லாதார்க்கும்.

ஹஜ்ஜுப்பெருநாளில் புத்தாடை அணிந்து தொழுகையை நிறைவேற்றிய பின்னர் ஆடு, மாடு, ஒட்டகம் இவற்றில் ஏதெனும் ஒன்றை இறை வனுக்காக அறுத்துப் பலியிட்டு உறவினர்கள், ஏழைகளுக்குப் பங்கிடுவர். உடல் நலமும் பொருள் பலமும் நிரம்பியவர் தன் ஆயுளில் ஒருமுறை மெக்காவிலுள்ள கஅபா என்னும் இறை ஆலயத் திற்குச் சென்று ஹஜ் கடமையை நிறைவேற்றுவர்.

இந்தப் பெருநாள் ஏன் கொண்டாடப்படு கின்றது என்பதற்கான காரணமாய் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு பின்னோக்கிய வரலாறு விரிகின்றது. அது தியாக வாழ்வை நமக்குப் படிப்பினையாக விட்டுச் சென்ற இறைத் தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் வரலாறு.

இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது மகனார் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்துப் பலியிடுவது போல மீண்டும் மீண்டும் கனவு காண்கிறார்கள். இது இறைவனின் கட்டளை என உணர்ந்த அவர்கள் தனது மகனிடத்தில் தனது கனவை விவரிக்கின்றார்கள்.இறைத்தூதர் இஸ்மாயீல் (அலை) அவர்களும் இறைவனின் ஆணை அதுவெனில் நான் தயார் என மாபெரும் தியாகத் திற்காகத் துணிகிறார்கள். அவ்வாறே துல்ஹஜ் மாதம் பத்தாம் நாள் தனது மகனை அறுக்க கத்தியை கூர்தீட்டி அறுக்க முனைகிறார்கள். கூர்முனை கொண்ட கத்தி அறுக்க மறுக்கிறது. இறுதி மணித்துளியில் மகனுக்குப் பதில் ஆட்டை அறுக்கச் செய்து இறைவன் அருள்பாலிக்கின்றான்.

அதனால்தான் அவர்களின் அத்தியாகத்தை நினைவு கூரும் விதமாக வசதியுள்ள இஸ்லாமியர்கள் ஆண்டுதோறும் ஆடு,மாடு, ஒட்டகம் இவைகளில் ஏதேனும் ஒன்றை அந்நாளில் அறுத்துப் பலியிட வேண்டும். இதன் நோக்கம் இறைத் தூதர் இப்ராஹீம் (அலை)அவர்கள் எவ்வாறு இறை ஆணைக்கு கட்டுப்பட்டு தனது மகனையே அறுத்துப் பலியிட முன் வந்தார்களோ அது போல இந்நாளில் ஆட்டை அறுத்து இறைவனுக்கு பலி யிடுபவர் அத்தகைய தியாக உணர்வின் ஊற்றாக நான் இறைவனுக்காக எதையும் தியாகம் செய்யத் தயார் என்பதன் முன் மொழிதலே.. இறைவன் கூறுகின்றான்: **(அவற்றின் மாமிசங்களோ, அவற்றின் இரத்தங்களோ அல்லாஹ்வை அடைவதில்லை. மாறாக உங்களிடமுள்ள (இறை) அச்சமே அவனைச் சென்றடையும். அல்குர்ஆன் (22 : 37)**

தியாகத்தின் உருவாக நாம் அறுத்துப் பலியிடும் பிராணியும் குறையுள்ளதாக இருத்தலாகாது. அறுத்துப் பலியிடும் பிராணிக்கு நோய் இருக்க கூடாது, காயம் ஏற்பட்டிருக்கக் கூடாது, அப்பிராணி கர்ப்பம் அடைந்திருக்கக் கூடாது, அதன் உடல் உறுப்புகள் சேதமடைந்திருத்தல் கூடாது. என்பது அதன் நிபந்தனைகளாகும் ஏனெனில் நாம் இறைவனுக்காக செய்யும் வணக்கத்தில் நாம் ஏனோ கடமைக்கு செய்கின்றோம் என்றில்லாமல் அனைத்திலும் பரிபூரண நிலையை கையாளச் செய்கிறது இஸ்லாம். நாம் பிறருக்கு தானம் செய்யும் போதும் கூட நமக்கு பிடித்தமான பொருளிலிருந்து தானம் செய்யுமாறு இஸ்லாம் வலியுறுத்துகிறது.இறைவன் கூறுகிறான்: **“நீங்கள் நேசிக்கும் பொருள்களிலிருந்து தானம் செய்யாத வரை நீங்கள் நன்மை அடைய மாட்டீர்கள்; எந்த பொருளை நீங்கள் செலவு செய்தாலும், நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிந்தவனாக இருக்கின்றான்”. (திருக்குர்ஆன் 3:92)**

பின்னர் நாம் அறுத்த பிராணியின் இறைச்சியை மூன்றாகப் பிரித்து மூன்றில் ஒரு பாகத்தை ஏழை எளிய மக்களுக்கும், மறு பாகத்தை உறவினர்களுக்கும் கொடுத்து விட வேண்டும். பிராணியின் தோலை விற்று வரும் பணத்தை வறியவர்களுக்கு தானம் செய்து விட வேண்டும்.

இது தான் ஹஜ்ஜுப் பெருநாளின் சாரம்சம். ஆனால், இது ஆண்டுக்கொருமுறை தவறாமல் செய்யும் சடங்கல்ல.இது தியாக உணர்வினை நமக்கு நினைவுபடுத்திச் செல்லும் திருநாள். நாம் ஏதேனும் தியாகம் செய்துள்ளோமா.. ஆம்! நாம் அனைவரும் தியாகிகளே அனால் அந்த தியாகங்கள் எதற்காக என்பதிலே தான் வேறுபாடு உள்ளது நாம் பணத்திற்காக எதையும் தியாகம் செய்கிறோம். நமது விருப்பத்திற்காக வாழ்கையே தியாகம் செய்கிறோம். இத்தகைய தியாகமல்ல அது மாறாக பிறருக்காக அதுவும் நம்மை படைத்துப் பரிபாலிக்கும் இறைவனுக்காக செய்கின்ற தியாகமே உன்னத மானது. அவனுக்காக நாம் அர்ப்பணம் செய்வது தான் மாபெரும் தியாகம். அது எளிதில் எல்லோருக்கும் கிடைத்து விடுவதல்ல அத்தகைய பண்பு இடைவிடாத பயிற்சியின் மூலமாக, இறைக் கட்டளைகளுக்கு கீழ்படிவதனூடாக, இறைவனை சார்ந்திருந்து வாழ்வதன் மூலமாக கிடைக்கப்பெறும் அரிய பண்பு. இத்தைகைய குணங்களே இப்ராஹீம்(அலை) அவர்களை அத்தகைய தகுதிக்கு இட்டுச் சென்றது ஆதலால் அவர்களின் வாழ்வு நமக்கான பயிற்சி பெட்டகமாகத் திகழ்கிறது. இறைத் தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் வாழ்வு முழுவதும் தியாகமே நிரம்பியிருந்தது. அதனால் தான் இறைவன் இப்ராஹீம் (அலை) அவர்களை தனது நண்பனாக ஆக்கிக் கொண்டேன் என குர்ஆனில் தெரிவிக்கின்றான்.

இப்ராஹீம் நபியின் தந்தை ஆஜர் தலைமைப் பூசாரி. சிலைகளை வடித்து அவற்றுக்குப் பூஜை செய்வது அவரது தொழில். மகன் இப்ராஹீமுக்கு இதில் உடன்பாடில்லை. தந்தை மகனுக்குமிடையே யான கருத்து வேறுபாடு கொள்கை மோதலாக முடிகிறது. அருமைத் தந்தை, சொந்த பந்தம், ஊர் உறவு, உயரிய பதவி, சொத்து சுகம் யாவும் துறந்து சத்தியப் பாதையில் லட்சியப் பயணம் மேற்கொள் கின்றார்கள் இப்ராஹீம் நபி.

ஓரிறைக் கொள்கையேந்திய பேரொளியாக அவர்களின் நெடும்பயணம் தொடர்கிறது. பகுத்தறிவுப் பிரச்சாரம் வீறுகொண்டு பரவுகிறது. எதிர்ப்பலைகள் ஓயாது உயர்ந்தெழுகின்றன. எதிர்ப்பின் உச்சமாக நம்ரூத் மன்னனின் முன் நிறுத்தப்படுகிறார்கள் இப்ராஹீம் நபி.

நம்ரூதிற்கு இறை மார்க்கத்திற்கு அழைப்பு விடுக்கிறார்கள். இதனைப் பொறுக்க இயலாத நம்ரூத் கொதித்தெழுந்து நெருப்புக் குண்டத்தைத் தயார் செய்து அதில் ‘இப்ராஹீமை வீசி எறியுங்கள்’ எனக் கட்டளையிடுகின்றான், அதைக் கண்டு துளியும் அஞ்சாத இப்ராஹீம் நபி கொண்ட கொள்கை மாறாது துணிந்து நின்று தனது வாழ்வைத் துறக்க தயாராகிறார்கள். அவர்கள் நெருப்பில் தூக்கி வீசப்பட்டார்கள். இப்ராஹீம் நபிக்காக இறைவன் நெருப்பைக் குளிர்ந்து போகும்படி கட்டளையிட்டு காப்பற்றினான்.

முதிர்ந்த வயதில் இஸ்மாயீல் என்னும் மகன் பிறக்கின்றார். இறைவன் தன் தூதர் இப்ராஹீமை சோதிக்க நாடுகிறான். இப்ராஹீம் நபி அவர்களுடைய மனைவியையும் குழந்தை இஸ்மாயீலையும் மனித சஞ்சாரமே இல்லாத பாலைப் பெருவெளியில் தனித்து விட்டுவருமாறு இறைவன் கட்டளை யிடுகின்றான். ஏன் எதற்கு என்ற கேள்வி இப்ராஹீம் நபியிடமோ அவர்களுடைய மனைவியிடமிருந்தோ எழவில்லை. கை பிடித்த மனைவியையும் தள்ளாத வயதில் பெற்றெடுத்த செல்ல மகனையும் தனித்து விட்டு சென்று இறை கட்டளையை நெஞ்சார ஏற்றார்கள். அவர்களது வாழ்வில் தொடர்ந்து வந்த இறைவனின் பரிச்சயத்தில் இறுதியில் வந்தது தான் மகனை அறுத்துப் பலியிடுமாறு வந்த இறை கட்டளை. இவ்வாறாக தனது வாழ்வின் அனைத்துச் சோதனைகளையும் நெஞ்சுறுதியோடு வென்றெடுத்த தியாகத்தை இறைவன் திருக்குர்ஆனில் சான்றளிக் கின்றான் **“இப்ராஹீமை அவருடைய அதிபதி சில விஷயங்கள் மூலம் சோதித்ததை நினைவுகூருங்கள். இன்னும் அவர் அவற்றில் எல்லாம் முழுமையாகத் தேர்ந்து விட்டார்.(அப்பொழுது) அவன் கூறினான்; ‘ நான் நிச்சயமாக உம்மை மனித குலத்திற்குத் தலைவராக்கப் போகின்றேன்.” (திருக்குர்ஆன் 2:124)**

தோழர்களே இத்தகைய தியாகத்தை நம் வாழ்வு தோறும் நினைத்து வாழவே இந்தத் தியாகத் திருநாள். இப்பெருநாளில் நாமும் தியாகச் செம்மல் இறைத் தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களை வழி காட்டியாகக் கொண்டு நம் வாழ்வமைப்போம். தியாகம் செய்து வாழ்வோம்! இறை நேசம் பெறுவோம்.

**அனைவருக்கும் இனிய ஹஜ்ஜுப் பெருநாள் நல்வாழ்த்துகள்.**

# இஸ்லாமும் மருத்துவமும் - 2



**இறைத்தூதர் வழங்கிய நுணுக்கமான மருத்துவங்கள்:**

அண்மையில் நாளிதழ் ஒன்றில் வெளியான மருத்துவத் தகவல் சம்பந்தமான செய்தி வாசிக்க நேர்ந்தது. அதில், ஆயுர்வேத மருத்துவத்துறை, உணவை மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். அவற்றில் ஒருவகை உணவு, மனிதனுக்கு ஆர்வம் மற்றும் அறியாமையை தூண்டுபவையாக உள்ளன. அந்த வகையில்தான் பூண்டும் வெங்காயமும் அடங்கியிருக்கின்றது. இவை மாமிசத்திற்குச் சமமாக கருதப்படுகின்றது. ஆயுர்வேத மருத்துவர் ராபர்ட் ஏ.ஸ்வோப்தா என்பவர், இவை இரண்டும் ஒருவித மயக்க நிலையினைத் தருவதால் ஆன்மிகத்தில் நாட்டமிருப்பவர்களின் நினைவாற்றலை குறைக்கும் என்கிறார். எனவே, பூண்டு மற்றும் வெங்காயத்தை ஆன்மிக நிகழ்வுகளில் ஈடுபடும்போது இதனைத் தவிர்ப்பது நல்லது எனவும் அவதானிக்கின்றார்.

பச்சையான வெங்காயம் மற்றும் பூண்டில் ஒருவகை அபாயகரமான பொடுலிசம் பாக்டீரியா உள்ளது என்கின்றனர் மருத்துவர்கள். காரமான, நெடி தரும் மணம் உள்ள இவை இரண்டும் செரிமானத்தின் விரோதிகள் ஆவர். எனவே, ஏப்பம், வாயில் துர்நாற்றம் மற்றும் வேர்வையில் துர்நாற்றம் ஏற்படுத்தும் இவை பாக்டீரியாக்களை ஈர்க்கும்.

வெங்காயமும் பூண்டும் நாம் சிறுவயதிலிருந்தே அன்றாடம் சமையலில் சேர்த்து சாப்பிட்டு வரும் ஓர் அத்தியாவசிய உணவு. ஆனால், இன்றைய நவீன மருத்துவம் இதனைச் சாப்பிடுவதை தவிர்க்கச் சொல்கிறது. பச்சையாக சாப்பிடுவது அபாயகரமானது எனவும், சமைத்துச் சாப்பிடும்போது, ஏதோ கொஞ்சம் பரவாயில்லை என்கிற நிலைப்பாட்டை நம்மிடம் முன் வைக்கிறது. இப்போது உங்களுக்கு ஓர் ஆச்சரியம், 1400 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மாமனிதர் வெங்காயத்தையும் பூண்டையும் உட்கொள்வதை கடிந்திருக்கிறார், தொழுகைக்கு வருபவர்கள் இதைச் சாப்பிட வேண்டாம் என அறிவுறுத்தியிருக்கிறார். அதனைக் கேட்ட அம்மாமனிதரைப் பின்பற்றுபவர்கள், என்ன காரணம் என்று கேள்விகளை எல்லாம் கேட்காமல் அப்படியே செவிசாய்த்து கட்டுப்பட்டனர். அவர் கூறிய அந்த அறிவுரை இன்றைய நவீன மருத்துவமாகவே மாறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமல்ல, இன்னும் ஏராளமான தகவல்கள் இருக்கின்றன... விருத்தசேதனம் செய்யுங்கள், உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள், மனித உடலில் முன்னூற்று அறுபது மூட்டு எலும்புகள் உள்ளன. அவற்றிற்கு நீங்கள் நன்றி செலுத்துங்கள் போன்ற பல நவீன மருத்துவத் தகவல்களைத் தந்து, அதன் பயன்களில் பொதிந்து கிடக்கும் அறிவுரைகளை மனித சமூகத்திற்கு வழங்கியுள்ளார் அந்த மாமனிதர். அவர் வேறு யாருமில்லை! ஏறக்குறைய 200 கோடி முஸ்லிம்கள் இன்று முகம் பார்க்காமலேயே, உருவப்படம் இல்லாமலேயே பின்பற்றும் ஒரே தலைவர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள்தான்.

நபிகள் நாயகம் சொல்லிச் சென்ற இதுபோன்ற பல தகவல்களை இஸ்லாம் கூறும் மருத்துவங்களில் அடுக்கிக் கொண்டே போகலாம். அதுமட்டுமில்லாமல் விஞ்ஞானம், அறிவியல், வாழ்வியல் போன்ற எல்லாத் துறைகளிலும் அவர் சொல்லிச் சென்ற அறிவிப்புகள் அனைத்தும் நடந்தேறியுள்ளது. இனி வரும் காலங்களில் நடைபெறவும் உள்ளது. இத்தனை நூற்றாண்டுக்குப் பின்பு இவையனைத்தும் நடைபெற்று நிரூபணம் ஆகியிருப்பதால், அவர் உண்மையான இறைத் தூதர்தான் என்று எந்த முஸ்லிம்களும் மார் தட்டிக் கொள்வதில்லை. அவ்வாறு தம்பட்டம் அடித்துக் கொள்ளவும் தேவையில்லை. ஏனெனில், அவர் பதினான்கு நூற்றாண்டு தொடக்கம் முதலும் சரி, இன்றைய நூற்றாண்டிலும் சரி, உலகம் அழியும் காலம் வரையும் சரி! எப்போதும் அவர்தான் இறைத் தூதர். அவர்தான் இறுதித் தூதரும் கூட. அவருக்கு இறைவனால், ஒட்டு மொத்த மனிதச் சமூகத்திற்கும் அருளப்பட்ட திருக்குர்ஆனும், அவருடைய வாழ்க்கையும் மனிதச் சமூகத்திற்கு வெளிப்படையாய், திறந்த வானமாய் விரிந்து கிடக்கிறது. நாம் செய்ய வேண்டியது அந்த இரண்டையும் வாழ்வில் ஒருமுறையேனும் படித்துச் சிந்தித்து உண்மையை அறிந்து கொள்ள வேண்டும்.

- M.T.

# திருக்குர்ஆன் போதிப்பது இதுதான் - 4



*சென்ற இதழ் தொடர்ச்சி...*

பெற்றோருக்கு நன்றி செலுத்த வேண்டும். அவர்கள் முதுமையை அடைந்தால், அவர்களுக்கு 'சீ' என்று கூட கண்ணியக் குறைவாக பேசக் கூடாது. அவர்களை விரட்டிவிடக் கூடாது. அவர்களுடன் பணிவாக இரக்கமாக நடக்க வேண்டும். திருக்குர்ஆன் (17:23-24) (31:14-15)

வீண் விரயம் செய்யக் கூடாது. கஞ்சத்தனம் கூடாது. திருக்குர்ஆன் (17:27-29)

கர்வம் கொண்டு நடக்கக் கூடாது. பணிவாக நடக்க வேண்டும். திருக்குர்ஆன் (17:37) (31:18) (25:63)

பேசினால் நல்லதையே பேச வேண்டும். திருக்குர்ஆன் (17:53)

பார்வையை தாழ்த்தி கற்பைப் பாதுகாத்துக்கொள். திருக்குர்ஆன் (24:30-31)

பொய் சாட்சி சொல்லக் கூடாது. வீணான காரியங்களில் ஈடுபடாதே. திருக்குர்ஆன் (25:72)

மற்றவரை கேலி செய்யாதே! கெட்ட பெயர் வைத்து கூப்பிடாதே! புறம் பேசாதே! துருவித் துருவி மற்றவனை குறை தேடாதே! திருக்குர்ஆன் (49:11-12)

குறை கூறிப் புறம் பேசித் திரியாதே! திருக்குர்ஆன் (104:1)

அநாதைகளை ஒடுக்காதே! , யாசிப்போரை விரட்டாதே! திருக்குர்ஆன் (93:910)

பசித்தோருக்கு உணவளி. திருக்குர்ஆன் (90:1316)


– நிறைவு –

திருக்குர்ஆன் இன்னும் ஏராளமான போதனைகளையும், வழிகாட்டுதலையும் மனித சமூகத்துக்கு வாரி வழங்குகின்றது. அதன் உள்ளார்ந்த அர்த்தங்களையும், அறிவுரைகளையும் உலகம் கடைப்பிடித்து ஒழுகுமேயானால் ஓர் ஒப்பற்ற உன்னத சமுதாயத்தை உருவாக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. வாய்ப்புக்கேடாக, இன்று சில கயவர்களால் திருக்குர்ஆன் கலங்கப்படுத்தப் படுகிறது. இதனைக் களைவதற்கு ஒரே வழி திருக்குர்ஆனை நாம் வாங்கி வாசிக்க வேண்டும். அது அப்படி என்னதான் சொல்லுகிறது என்று ஆய்வு செய்ய வேண்டும்.

ஒட்டுமொத்த மனித சமூகத்தையும் ஒருசேர அழைத்து அறைகூவல் விடும் இவ்வேதத்தை ஒருமுறையேனும் படித்துதான் பாருங்களேன். அறிவை பட்டைதீட்ட வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் ஏற்ற அறிவியல் நூலாக, உடலையும் மனதையும் குணப்படுத்தும் மருத்துவ நூலாக, சமூகத்தை அமைதிப்படுத்தும் சமாதான நூலாக திருக்குர்ஆன் விளங்குகிறது.

திருக்குர்ஆன் மனிதனாகப் பிறந்த எல்லோருக்கும்தான்!

"இது உலக மக்கள் அனைவருக்கும் ஒரு நல்லுரையேயன்றி வேறில்லை!" (திருக்குர்ஆன் 68:52)




**வாசகர்களே!**
**உங்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் அனுப்ப வேண்டிய முகவரி:**

**"அழைப்பொலி" மாத இதழ்**
எண்.14(7-A), பி.பி.டி.ரோடு, தாங்கல்,
திருவொற்றியூர், சென்னை – 600 019.
அலைப்பேசி, வாட்ஸ்அப் : 9884928787
மின்னஞ்சல் : azhaippoli2017@gmail.com